மாநிலத் தேர்தல் ஆணையம்
புதுச்சேரி

எண்.345/மாதேஆ/ITCELL/2021 புதுச்சேரி, 10-10-2021.

# செய்தி குறிப்பு

மாநில தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளம் (https://sec.py.gov.in), உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல், 2021 தொடர்பான தகவல்களை புதுச்சேரி யூனியன் பிரதேச வாக்காளர்களுக்கு, (i) வார்டு வரைபடங்கள், (ii) வாக்குச் சாவடி விவரங்கள், (iii) படிவங்கள் மற்றும் கையேடுகள், (iv) வாக்காளர் பட்டியல் போன்றவற்றை வழங்குகிறது. மேலும், வாக்காளர் தேடல் வசதி, இணையதளத்தில் "சேவை" பட்டியலின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், வரவிருக்கும் புதுச்சேரியின் யூனியன் பிரதேச, உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் 2021-இல், வாக்களிக்கும் வாக்காளர்கள், தங்கள் வாக்குச் சாவடிகளைக் கண்டறிய வசதியாக "MyVoteforCivicElections" என்ற மொபைல் செயலி, புதுச்சேரியின் மாநில தேர்தல் ஆணையத்தால் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த மொபைல் செயலியை பயன்படுத்துவதன் மூலம், வாக்காளர்கள் தங்கள் EPIC எண்ணைப் பயன்படுத்தி தங்கள் வாக்குச் சாவடியைக் கண்டறியலாம், தேர்தல் அட்டவணை மற்றும் வேட்பாளரின் விவரங்களைப் பார்க்கலாம். கோவிட்-19 நோயாளிகள், 80+ வயதுடைய வாக்காளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் வாக்களிக்க பதிவு செய்வதற்கான வசதியும் மொபைல் செயலியில் உள்ளது.

இந்த மொபைல் செயலியினை, மாநில தேர்தல் கமிஷனின் இணையதளமான "https://sec.py.gov.in"-இல் இருந்து "பதிவிறக்கம்" பட்டியலின் கீழ் பதிவிறக்கம் செய்யலாம்.

வாக்காளர்கள் இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ராய் பி. தாமஸ்)
மாநிலத் தேர்தல் ஆணையர்